1972 மார்ச் 10]

திண்டிவனம்–செஞ்சி–திருவண்ணாமலை சாலை

* 418 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனத்திலிருந்து செஞ்சி வழியாக திருவண்ணாமலை அடையும் சாலையை அகலப்படுத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து கால்வாய்கள்

* 419 வினா—திரு. நா. நாச்சியப்பன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து தெற்கு பகுதியில் சங்கராபுரம் பகுதிக்கு கால்வாய் வெட்டி தண்ணீர் பாசனத்திற்கு விடக்கோரி அப்பகுதி மக்கள் 1962-லிருந்து தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பதின் பேரில் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொன்னியாற்றுக்குக் குறுக்கே உள்ள சாத்தனூர் 'பிக்அப்' அணைக் கட்டிலிருந்து வலதுபுறம் ஒரு கால்வாய் வெட்டி வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கம் வட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்லக்குறிச்சி வட்டத்திலும் உள்ள நிலங்களுக்குப் பாசன வசதியளிக்க ஒரு திட்டம் உள்ளது. இத்திட்டத்தில் சங்கராபுரம் பஞ்சாயத்து யூனியனிலுள்ள சில கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

திரு. ந. நாச்சியப்பன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வாய்க்கால் வெட்டுவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுமதி கோரி வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். எனவே, விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.